திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, பொதுப்பணித்துறையின் கீழ் இருக்கும் ஏரிகளில் பழைய ஆயக்கட்டுத்தாரர்களுக்குத்தான் தண்ணீர் வழங்கப்படுகிறது. நம்முடைய அரசாங்கம் வந்ததற்குப் பின்னாலே பல லட்சக்கணக்கான பட்டாக்கள் கொடுத்து இருக்கிறோம். அப்படி புதுப் பட்டா கொடுத்த நிலங்களில் உள்ளவர்களை புது ஆயக்கட்டுக்காரர்கள் என்று பிரித்து வைத்து இருப்பதால், தண்ணீர் வழங்குவதில் தகராறு வருகிறது. ஆகவே, இந்த அரசாங்கம் வந்ததற்குப் பிறகு புதிய பட்டாக்களை யார் யாருக்கு கொடுத்து இருக்கிறார்களோ, அந்த இடங்களில் உள்ளவர்களையும் ஆயக்கட்டுக்காரர்களாக சேர்த்துக்கொண்டு, தண்ணீர் வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒரு ஏரிக்கு இவ்வளவு தான் என்று குறிப்பிட்ட அளவு ரிஜிஸ்டர்ட் ஆயக்கட்டுதான் இருக்கும். அவர்களுக்கு மட்டும்தான் தண்ணீர் கொடுக்க முடியும். ரிஜிஸ்டர்ட் ஆயக் கட்டு இல்லாத ஆயக்கட்டுத்தாரர்களுக்கு தண்ணீர் கொடுப்பது சாத்தியமில்லை. கொடுப்பதற்கான வாய்ப்பு இருந்தால், அந்த இடங்களில் பரிசீலிக்கலாம்.

பாலங்கள்

*465 வினா—**திரு. ரா. ரா. முனுசாமி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செஞ்சி வட்டம், திருவண்ணாமலை ரோடில் சத்தியமங்கலம் அருகில் வராகநதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலத்தை அகலப்படுத்தும் செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

*466 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவள்ளூர் வட்டம், மாகரம் கண்டிகை கிராமத்து மக்கள் தங்கள் வயலுக்கு செல்லும் வழியில் குறுக்கே போகும் பூண்டி உரவு கால் மீது சிறு பாலம் கட்ட திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

1972 மார்ச் 13]

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, அந்த இடத்தையும் அமைச்சரவர்கள் நேரிலே வந்து பார்த்து இருக்கிறார்கள். புழலேரிக்கு வரும் அந்தக் கால்வாய் ஒரு கிராமத்திலுள்ளவர்களை அவர்களுடைய வயலிலிருந்து பிரித்து, அவர்கள் மறுபடியும் போகமுடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இந்த ஆண்டே அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமா என்பதை அமைச்சரவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போது அது அதிகாரிகளின் ஆய்வில் இருக்கிறது. இந்த ஆண்டே கட்டுவதற்கான முயற்சிகள் எடுத்து வருகிறோம்.

சாலைகள்

* 467 வினா—திரு. மே. சி. தூயமணி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மேட்டுப்பாளையம் தொகுதியில் உள்ள காரமடை-வெள்ளியங்காடு சாலை சீரமைப்புத் திட்டம் நிறைவேற அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தற்போதைக்கு இச்சாலையை சீரமைப்பதற்கு திட்டம் ஒன்றுமில்லை.

திரு. மே. சி. தூயமணி : பேரவைத் தலைவரவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதியில் இருக்கிற காரமேடை—வெள்ளியங்காடு வரையில் இருக்கும் சாலை சீரமைப்பு வேலை நிதி வசதி போதாததால் தடைபடுகிறது. எனவே, அதற்குப் போதுமான நிதியை அரசு அளித்து வேலையைத் துரிதப்படுத்துவதற்கான உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா : அந்தச் சாலையின் மொத்த நீளம் 10 மைல் 3 பர்லாங்கு. அதிலே 6 மைல் 7 பர்லாங்கு அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இருக்கிறது. பஸ்-ரோடு ஸ்கீமில் சேர்க்கப்பட்டிருக்கிறது. சீரமைப்பதற்கு ரூ. 30,000 செலவழிக்க இருக்கிறோம். அரசாங்க நிர்வாகத்தில் இருக்கும் ரோடைப் பொறுத்தவரையில் நடவடிக்கை எடுக்க முடியும். மீதியுள்ள சாலையின் நீளத்திற்கு பஞ்சாயத்து நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுபற்றி பரிசீலிக்கலாம்.

* 468 வினா—திரு. ஏ. சுப்பிரமணியம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :